**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12.07.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் கல்விக்கான சாலை வரைபடம் குறித்த கருத்துப் பட்டறை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "வேளாண்மை கல்விக்கான சாலை வரைபடம் தயாரித்தல்" குறித்த பட்டறை 11.07.2023 அன்று ராசி விதைகள் கருத்தரங்கு கூடத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மேலும் அவரது துவக்கவுரையில் வேளாண்மை கல்வியில் எதிர்கால உத்திகள் குறித்து விவாதங்கள் செய்யப்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார். முனைவர். பி. ராமசுந்தரம், முன்னாள் தேசிய ஒருங்கிணைப்பாளர். NAHEP – IDP திட்டம் இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். முனைவர். எஸ்.டி. சிவகுமார், என்.ஏ.எச்.இ.பி - ஐடிபி வேளாண்மைக் கல்வி மற்றும் மனித வள மேம்பாட்டுக்கான முன்னோக்குகள் குறித்து பங்கேற்பாளர்களுக்கு உரையாற்றினார். முனைவர். ராமசுந்தரம் அவர்கள் தேசிய வேளாண் கல்வி கருத்து / தத்துவம் குறித்தும் மற்றும் முனைவர். என். செந்தில், முதன்மையர் (SPGS) & இயக்குனர் (CPMB) TNAU இல் விவசாய கல்விக்கான சாலை வரைபடம் குறித்து உரையாற்றினார். கூட்டத்தில் சர்வதேச பல்கலைக்கழகங்கள், தேசிய நிறுவனங்களுடன் சாண்ட்விச் / இரட்டைத் பட்டம் வழங்கும் திட்டம், இதர பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், சி.ஜி.ஐ.ஆர் மற்றும் ஐ.சி.ஏ.ஆர் நிறுவனங்களுடன் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள் மற்ற நாடுகளில் செயற்கைக்கோள் வளாகங்களை நிறுவுதல் மற்றும் புதிய பட்டப்படிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவை விவாதிக்கப்பட்டன.

**மக்கள் தொடர்பு அலுவலர்**